திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : நீங்கள் என்னை விரிவாகப் பேச விடுவதில்லை. 15 நிமிடமாவது பேச விட்டால் நிறைய சொல்லுவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு சிறிய விஷயம். இன்றைய நிலைமையை முதலிலே சொல்லி விடுகிறேன். இந்த விவாதம் முடிந்து நமது முதலமைச்சருடைய ஆட்சி மன்றச் செயலாளருடைய பதிலுரை முடிந்து அதற்கு பிறகு 9 சட்ட முன் வடிவுகள் 1.30-க்குள் முடிய வேண்டும். 4 மணிக்கு மீண்டும் சட்ட மன்றம் இருக்கிறது. முன் வரிசையில் இருக்கிற அத்தனை பேரும் பேச வேண்டும். அதற்கப்புறம் எனக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை. இரவு 9 மணி ஆனாலும் 10 மணியானாலும் நடத்திக் கொண்டே இருக்கிறேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : அடுத்து மண்டல் கமிஷன், ஊரிலே எங்கே போனாலும் மண்டல் கமிஷன், மண்டல் கமிஷன் என்று பேசுகிறார்கள். 47 கோடி பேருக்கு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாலையிலே நீங்கள் பேச வேண்டும். அதை நினைவூட்டுகிறேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : 47 கோடி பேருக்கு சலுகை கொடுத்தது எங்கள் சர்க்கார், வி.பி. சிங் அவர்கள் கொண்டு வந்தார்கள். அவர் பதவி இழந்த காரணமே அது தான். இவ்வளவு சலுகை கொடுத்தார்களே, அது எதற்காக கொடுத்தார்கள், யாருக்காக கொடுத்தார்கள்' எதற்காக பதவி இழந்தார்கள் என்று யாருக்காவது தெரியுமா ? இன்னும் சட்டமன்றத்திலே கூட சரியாக நாம் அதைப் பற்றி விரிவாகப் பேசவில்லை. ஆதரவு கொடுத்தார்கள், சலுகை கொடுத்தார்கள் என்றால், யார் வி.பி. சிங் என்று கேட்கிறார்கள். அந்த நிலைமை இந்த நாட்டிலே உருவாகியிருக்கிறது. மண்டல் கமிஷனிலே என்ன சொன்னான் ? கவர்னர் அறிக்கையைப் பார்த்தேன் நான். 1890 ஆம் வருஷத்திலே 16 வகையான பேக்வேர்டு கிளாசுகள் தான் இருந்தன. 1903 லே 63 தான் பேக்வேர்டு கிளாசுகள். இன்றைக்கு 213 பேக்வேர்டு கிளாசுகள் இருக்கின்றன என்றால் எங்கேயிருந்து முளைத்தன அவை ? எப்படி என்று தெரியவில்லை. வெள்ளைக்காரன் காலத்திலே 16 ஆக இருந்து, பிறகு 63 ஆகி, இன்றைக்கு இருநூற்று சொச்சம் பேக்வேர்டு கிளாசுகளாக இருந்தால் இன்னும் எத்தனை இருக்கிறதோ, அத்தனைக்கும் எப்படி தருவது ? மண்டல் கமிஷன் அறிக்கை பொதுவில் சரி, அப்படி எல்லோருக்கும் வர வேண்டியது தான். நாங்களே வாழ வேண்டும் என்று சொல்லவில்லை. இனிமேல் யாராவது வாழட்டும். ஆனால் அதற்கும் வழி வகை விட மாட்டேன் என்கிறார்களே, இப்போது பாருங்கள் வடக்கே குத்திக் கொண்டு சாகிறார்கள். நிஜமாக சாகிறார்களோ அல்லது சீமெண்ணெய் ஊற்றி சாகடிக்கிறார்களோ